**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.50/2020**
**Prosecution Witnesses :1**

| | | | |
|---|---|---|---|
| Name | : **மாயாண்டி** | Caste | : |
| Husband Name/ Father Name | : **சின்னான்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. சாட்சி அவராகவே சொல்ல சொல்ல நீதிமன்றம் அதனை முதன்மை சாட்சியமாக பதிவு செய்கிறது)
**(27.01.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது சென்னையில் குடியிருந்து வருகிறேன். நான் வாட்ச்மேன் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரி எனது மருமகன் ஆவார். இவ்வழக்கில் நானும் எதிரியும் ஏற்கனவே சமாதானம் ஆகிவிட்டோம். நான் கடந்த 26.09.2017ம் தேதி மாலை 05.30 மணியளவில் எனது சொந்த வேலையாக தும்மக்குண்டு கிராமம் போய்விட்டு எங்கள் ஊர் ஆத்துக்கால் பக்கம் வரும் போது ஓடோபோன் டவர் அருகே அடையாளம் தெரியாத இருநபர்கள் என்னை அசிங்கமாக திட்டி கீழே கிடந்த கம்பை எடுத்து எனது தலையின் இடதுபக்கத்தில் அடித்து இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார். 29.09.2017ம் தேதி இரவு 9 மணிக்கு காவல் நிலையம் சென்று விபரம் சொன்னேன். அதை போலிசார் எழுதிக் கொண்டார்கள். அதில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து மட்டும் என்னுடையது.

**அந்த புகார்  மனுவில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 ஆகும்**. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை

**மறுவிசாரணை**. இல்லை